# அறிமுகம்

## 1. பா.மொ.க வில் பல்பண்பாட்டுத் திறனை ஊக்குவித்தல்: காரணங்களும் அதன் பொருளும்

புலம்பெயர் நாடுகளிலும் (அதேபோல் வேறு பல இடங்களிலும்) உள்ள சிறுவர்களும் இளம்பருவத்தினரும் பண்பாட்டு அடிப்படையிலும், மொழியியல் அடிப்படையிலும் பெரிதும் வேறுபட்ட வேற்றியல்புள்ள சூழல்களில் வளர்கிறார்கள். இப் பல்வேறுவகைப்பட்ட தன்மை நாளாந்த பாடசாலை வாழ்வுச் சூழலிலும் வெளிப்படுகிறது. இத்தகைய சூழலில் எந்த ஒரு வகுப்பறையும் பன்மொழிகளையும் பல்பண்பாடுகளையும் கொண்டமையாமல் விடப்படவில்லை. அந்த இடங்களில் புலம்பெயர் பின்னணியுடன் கூடிய பிள்ளைகளின் விகிதாசாரம் மொத்த மாணவர் தொகையின் 30, 40, 50 சதவிகிதம் அல்லது அதைவிட அதிகரிக்கவில்லை. பாரம்பரிய மொழிக்கல்வி வகுப்புகள் பாடசாலையின் நிறுவனச் சூழலில் ஒரு விதிவிலக்காக இருக்கின்றன. பிரதேச பேச்சுமொழிகள் மற்றும் ஒரு பகுதி தேசியம் சார்ந்த வேறுபாடுகள் இருந்தாலும் (எடுத்துக்காட்டாக வெவ்வேறு அராபிய நாடுகளிலிருந்து அராபியமொழி பேசுவோர்) ஓர் அராபிய, துருக்கிய அல்லது அல்பானிய பா.மொ.க பற்றி நாம் பேசமுடியும்.

பாடசாலையின் முதன்மைப்பணி என்பது பிள்ளைகளையும், இளம்பருவத்தினரையும் சமூகவாழ்வுக்கு தயார் பண்ணுதல் ஆகும். அதாவது எங்களைப் பொறுத்த வரையில் பல்பண்பாட்டு, பன்மொழிச் சூழலில் மாணவர் வாழ்வதற்கான தயார்ப்படுத்தலை ஏற்படுத்துவது ஆகும். இந்த சவால்கள், வழக்கமான வகுப்புகளுக்கும் பா.மொ.க வுக்கும் தொடர்புடையது, இதனால் வழமையான வகுப்புக்களுக்கு இணங்க உள்ளடக்கத்தையும் கருப்பொருள்களையும் குடியிருக்கும் நாட்டுக்கு இணக்கமுறச் செய்யும் அதே வேளையில் பா.மொ.க (அ) நாம் பிறந்து வளர்ந்த நாட்டின் பண்பாடு, மொழியோடு தொடர்புபடுத்துகிறது, (ஆ) புலம்பெயர்ந்து வாழும் நாட்டின் வாழ்வோடு தொடர்புபடுத்தும் கருப்பொருள்களை வலியுறுத்துகிறது. தங்கள் கல்விச் செயற்பாடுகளை நடாத்துவதற்காக இருபகுதியினரும் பல்பண்பாட்டு, பன்மொழி சமூகங்களில் ஒரு வெற்றிகரமான வாழ்வுக்கு இன்றியமையாத ஒரு தொடரான திறன்களை வளர்ப்பதற்குச் சுறுசுறுப்பான முறையிலே பங்களிக்க வேண்டும். அவையாவன, எடுத்துக்காட்டாக, முரண்படும் தன்மையும், பொறுமையும், ஆர்வமும் ஏற்றுக்கொள்ளலும் (மறுதலிப்புக்குப்பதிலாக) மற்றைய பண்பாடுகளுடன் தொடர்புபட்டு ஒரு வாழ்வுக்கான வழியும், ஒருவர் தன்னுடைய விழுமியங்கள் நியமங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் என்பவற்றை மீள்பரிசீலனை செய்வதற்கான விருப்பமும் உள்ளடங்கும்.

குடியேறிய மக்களின் குடும்பங்களிலிருந்து வந்த சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு இன்னொரு இன்றியமையாத பல்பண்பாட்டுத் திறன் ஒன்று உண்டு : பிறந்து வளர்ந்த நாட்டுப் பண்பாடினையும் குடியேறிய நாட்டுப் பண்பாடினையும் நோக்கும்போது மேம்பாட்டுக்கு ஊறு செய்யும் (சிக்கல்கள், முரண்பாடுகள்) பண்பாடுகளுக்கிடையில் இருந்தும் பெருமளவு இறுக்கமற்ற நியமங்கள் சமூகவிழுமியங்களிலிருந்தும் உருவாகலாம். பா.மொ.க ஆசிரியர்கள் இது தொடர்பாக மிக்க பெறுமதியான பங்களிப்புகளைச் செய்யலாம். ஏனெனில், வழமையான பாடத்திட்ட ஆசிரியர்களை விட இவர்கள் பெரும்பாலும் இரு பண்பாட்டுச் சூழல்களுடன் நன்கு அறிமுகமானவர்கள். இந்தத் தொகுதியில் அடங்கியுள்ள கற்பித்தல் மதியுரைகள் கருப்பொருள் வேறுபாட்டுடனான தலைப்புப் பரப்புகளுக்கு பா.மொ.க பங்களிப்புகள் எப்படிப்பட்டன (கீழே பார்க்கவும்) என்பதைச் சுட்டுகின்றன. அவர்களுடைய நடைமுறைப்படுத்தல், தழுவல், விரிவாக்கம் உணர்வூட்டும் கிளர்ச்சியூட்டும் பாடங்களுக்கு இட்டுச் செல்லுமாயின், இவ்வெளியீட்டின் நோக்குகள் அடையப்பட்டனவாகும்.

## 2. இத்தொகுதியின் இலக்குகளும் கட்டமைப்பும்

இந்த வழிகாட்டி பல்பண்பாட்டுத் திறன்களின் மேம்பாட்டுக்கான பின்பற்றத்தக்க கருப்பொருட்களின் வழியே பா.மொ.க மாணவர்க்கும் ஆசிரியர்களுக்கும் பக்கத்துணை செய்கிறது. தாம் வாழும் சூழல் நிலைமைகளுக்கும் சமூகப் பின்னணிக்கும் இடையிலான முரண்பாட்டில் பிள்ளைகளும் இளம்பருவத்தினரும் முகங்கொடுக்க அவர்களை இவை செயற்படுத்தும். ஒரு பரந்துபட்ட, பெரிதும் முரண்-தன்மையான, நிச்சயமற்ற சமூகத்தில் எதிர்பார்ப்புக்களை செயற்படுத்தவும் மோதல் சூழல்களை எதிர்கொள்ளவும் போதுமான முறையில் தொடர்பாடல்களை ஏற்படுத்தும்பொழுது அவர்களது பல் பண்பாட்டு மற்றும் பன்மொழி அடையாளம் ஒரு பெறுமதிமிக்க வளமாக பணியாற்றமுடியும்.

இந்தத் தொகுதியானது ஒரே மாதிரியான அமைப்புடன் ஆறு கருப்பொருள் அலகுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் ஒரு சுருக்கமான அறிமுகத்துடன் தொடங்குகிறது. அத்துடன் வெவ்வேறான திறன்விருத்திப் பரப்புகளுடன் தொடர்புபட்ட ஒரு வேறுபட்ட கற்பித்தல் பரிந்துரைகளை உள்ளடக்கியுள்ளது.(நூலின் இறுதிப்பகுதியில் உள்ள கண்ணோட்டத்தையும் கீழேபார்க்கவும்.) கற்பித்தல் மதியுரைகள் குறிக்கப்பட்ட தரத்துடனும் தேர்ச்சிமட்டங்களுடனும் ஒப்புநோக்கப்பட்டன. எனினும் எல்லாமே உயர்தர கீழ்ப்பிரிவு வகுப்புகளுக்கு தேவையான மாற்றங்களுடன் பயன்படுத்தப்படமுடியும்.

சிறுவர்களினதும், இளைஞர்களினதும் உண்மையான மற்றும் வாழும் சூழல் மீதான திசைமுகப்படுத்தல்தான் இந்த ஆறு அலகுகளுக்குமான கருப்பொருள் தெரிவுக்கு வகைப்பாடாக அமைந்தது. மாணவர்களை அதிகமாகவும் உண்மையாகவும் அவர்களது செயற்பாட்டுச் சாத்தியங்களுக்கும் தன்திறன் தன்மைக்கும் உதவும் முகமாக முரண்தன்மைகள், சாத்தியங்கள், வளங்கள், தீர்வுகள் மற்றும் ஒரு பிரிவை ஊடறுத்துச் செல்லும் செயலாக எல்லா வகுப்புகளிலும் பல்பண்பாட்டுக் கற்றலை ஊக்குவிக்க கற்பித்தல் மதியுரைகள் வடிவமைக்கப்பட்டன. வழமையான கல்வி மற்றும் பா.மொ.க குழுக்களுடனான ஒத்துழைப்பு, வடிவமைப்பில் எப்போதும் உள்ளடக்கப்பட்டதாகவும் அதிகளவு விருப்பத்துக்குரியதாகவும் இருந்தது.